# கற்றல் விளைவு / திறன் வழி மதிப்பீட்டுத் தேர்வு

**வகுப்பு : ஏழு**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

EMIS ___________________ **மதிப்பெண்கள்: 25**

**மொழி : தமிழ் வழி** **தமிழ்** **நேரம் :40 நிமிடங்கள்**

**கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்துப் பொருள் உணர்ந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

செல்வந்தன் வீட்டினருகில் ஓர் ஏழை வாழ்ந்து வந்தான். நாள்தோறும் அவன் தன் எளிமையான குடிசை வாயிலில் அமர்ந்து, பாடிக்கொண்டே கூடை முடைவான். அவன் மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று மகிழ்ச்சியற்ற செல்வந்தன் யோசிக்கலானான். அவன் ஆனந்தத்தைத் கண்டு பொறாமைப்படத் தொடங்கினான்.

எப்படியாவது அவன் மகிழ்ச்சியை ஒழித்துக்கட்டி விடுவதெனத் தீர்மானித்தான். தொடர்ந்து, தன் ஆட்களிடம் அவன் குடிசைக்குத் தீ வைக்கச் சொன்னான். எஜமானக்குப் பயந்த வேலையாட்கள், சொன்னபடி குடிசையைக் கொழுத்திவிட்டனர். கூடை முடைபவன் வெளியே ஓடி வந்து எப்படியோ உயிர் தப்பினான். ஆனால் ,அவனுடைய கூடைகள், பொருட்கள் எரிந்து சாம்பலாயின. துயரத்தில் ஆழ்ந்தவனாய் அவன் நீதிபதியிடம் சென்றான். நீதிபதிக்கு செல்வந்தர் மேல் தான் சந்தேகம்.அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கத் தீர்மானித்தார். அதன்படி, செல்வந்தனையும் கூடை பின்னுபவனையும் வெகு தூரத்திலுள்ள ஒரு குக்கிராமத்திற்கு அனுப்பி வைத்தார். அங்கு வாழ்ந்து வந்தவர்கள் ஆதிவாசிகள்.அந்தச் சூழ்நிலையைக் கண்ட செல்வந்தன் வெலவெலத்துப் போனான். ஆனால் கூடை பின்னுபவன் பயப்படவில்லை. அவன் என்ன வேலை வேண்டுமானலும் செய்யத் தயாராக இருந்தான். கிராமவாசிகளின் உத்தரவுப்படி அவன் விறகு வெட்டினான். சொன்னபடி செய்ததின் பலன், அவனுக்கு உணவு கிடைத்தது. தொடர்ந்து கூடை முடைந்து கொடுத்தான். கிராமவாசிகளுக்கு ஒரே மகிழ்ச்சி.அவனை நன்றாக கவனித்துக்கொண்டனர்.

செல்வந்தன் வேலையும் செய்யவில்லை, அவனுக்கு உணவு கிடைக்கவில்லை. பசி தாங்காமல் தவித்தான். தன் இயலாமையை எண்ணி வெட்கப்பட்டான்.

**வினாக்கள்;**

**1. கதைக்கு ஏற்ற பழமொழியைத் தேர்ந்தெடு.**

அ) முயற்சி திருவினையாக்கும்.

ஆ) ஆழம் தெரியாமல் காலை விடாதே.

இ) குந்தித் தின்றால் குன்றும் மாளும்.

ஈ) உழைப்பின்றி ஊதியம் இல்லை.

2. **ஏழை மகிழ்ச்சியாக இருந்ததற்கு காரணம்?**

அ) அவர் ஏழ்மையாக இருந்ததால்.

ஆ) அவர் குடிசை வாயிலில் அமர்ந்ததால்.

இ) தனக்கு விருப்பமான வேலையைச் செய்ததால்.

ஈ) செல்வந்தரைப் பார்த்ததால் .

3. **சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**கூற்று : கூடை பின்னிய ஏழையை கிராமத்து மக்கள் நன்றாக கவனித்துக்கொண்டனர்.**

**காரணம் : அவன் செல்வந்தனைப்போல் என்ன வேலை வேண்டுமானலும் செய்யத் தயாராக இருந்ததால்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி
இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

4. **'கைத்தொழில் ஒன்றைக் கத்துக்கொள்!**

**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்!'–இவ்வரிகளுக்குப் பொருத்தமான கதைமாந்தர் யார் ?**

அ) ஊர்மக்கள் ஆ) நீதிபதி இ) செல்வந்தர் ஈ) ஏழைமனிதர்

5. **கீழ்க்காணும் சொற்றொடர்களில் செல்வந்தருக்குப் பொருத்தமற்ற கருத்தைத் தேர்ந்தெடு.**

அ) குமரன் வகுப்பறையில் உள்ள சகமாணவர்களின் செயல்களில் கவனம் செலுத்துவான்.

ஆ) குமரன் வகுப்பறையில் உள்ள சகமாணவர்களின் மதிப்பெண்ணுடன் ஒப்பிடுவான்.

இ) குமரன் வகுப்பறையில் உள்ள சகமாணவர்களுக்கு துன்பம் விளைவிப்பான்.

ஈ) குமரன் வகுப்பறையில் உள்ள சகமாணவர்களின் தேர்ச்சியைக்கண்டு மகிழ்ச்சி கொள்வான்.

---

# English

## The Tiger and the Woodpecker Story

One day a bone got stuck in a tiger's teeth while he was eating some flesh. He tried hard to remove it but could not. Helpless, he started roaring in pain.

A woodpecker sitting nearby saw the tiger's discomfort and asked what the matter was. The tiger pointed to the bone stuck in his teeth. The woodpecker promised to remove the bone from his teeth on the condition that the tiger would always give him a portion of his food. The tiger agreed and the woodpecker took out the bone with its sharp beak.

One day, the tiger had caught a fat prey and the woodpecker asked for his share. The tiger refused and said, "You should be thankful that I did not kill you when you entered my mouth." The woodpecker was enraged at the ungrateful tiger. He struck the tiger in one eye with his beak. The tiger roared with pain and the woodpecker said, "You should be thankful that I didn't blind both your eyes."

**1. Why did the Woodpecker help the Tiger?**

a. To help the tiger since he was in pain.

b. To have a share of the tiger's food.

c. To have a good relationship with the tiger.

d. To provide his humble service to the tiger.

**2. What got stuck in the Tiger's teeth?**

a. Flesh    b. Meat    c. Bone    d. Feather

**3. The woodpecker was enraged at the ungrateful tiger.**

**Which option below can replace the underlined word in the given sentence?**

a. peaceful    b. curious    c. furious    d. delighted

**4. Did the Tiger keep his promise and share his food with the woodpecker?**

a.Yes, he did but very less    b. Yes, he gave everything he had

c. No he denied to share his food    d. No he rather gave him only bone

***5. "You should be thankful that I did not kill you when you entered my mouth."***

**Which option below is the opposite of the underlined word in the sentence above?**

a. Pleased    b. Ungrateful    c. Honoured    d. Grateful

---

# கணிதம்

**1.** ஒரு அறையில் உள்ள குளிரூட்டி தானாகவே ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் 1.5°C வெப்பநிலை குறைகின்றது. இரவு 8 மணிக்கு அறையின் ஆரம்ப வெப்பநிலை 40°C ஆக இருந்தது எனில், நள்ளிரவு 12 மணிக்கு வெப்பநிலை என்னவாக இருக்கும்?

a. 58°C b. 28°C c. 22°C d. 12°C

**2.** ஒரு அறையில் உள்ள குளிரூட்டி தானாகவே ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் 1.5°C வெப்பநிலை குறைகின்றது. இரவு 8 மணிக்கு அறையின் ஆரம்ப வெப்பநிலை 40°C ஆக இருந்தது. நள்ளிரவு 12 மணி முதல் குளிரூட்டியில் தலைகீழ் செயல்முறை தொடங்கப்பட்டது. இதன் காரணமாக ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் வெப்பநிலை 0.5°C அதிகரித்தது எனில், காலை 6 மணிக்கு அவளது அறையின் வெப்பநிலை என்னவாக இருக்கும்?

a. 13°C b. 22°C c. 31°C d. 40°C

3. 20 கேள்விகளைக் கொண்ட வகுப்புத் தேர்வில், ஒவ்வொரு சரியான பதிலுக்கும் 2.5 மதிப்பெண்களும், ஒவ்வொரு தவறான பதிலுக்கும் –1.5 மதிப்பெண்களும், முயற்சிக்காத கேள்விகளுக்கு 0 மதிப்பெண்களும் வழங்கப்படும்.

i) A 8 சரியான மற்றும் 12 தவறான பதில்களைப் பெறுகிறார்.

ii) B 10 சரியான மற்றும் 10 தவறான பதில்களைப் பெறுகிறார்.

iii) C அவள் முயற்சிக்கும் 17 கேள்விகளில் 4 சரியான மற்றும் 10 தவறான பதில்களைப் பெறுகிறார்.

A, B, C மூவரும் பெற்ற மதிப்பெண்களை முறையே X,Y, Z என எடுத்துக்கொண்டால், பின்வருவனவற்றில் எது சரியானது?

a. $X + Y < Z$ b. $X + Y > Z$ c. $X + Z < Y$ d. $X + Z > Y$

**4.** ஒரு குடோனில் ஆரம்பத்தில் 57 உப்பு மூட்டைகள் வைக்கப்பட்டிருந்தது. திடீர் வெள்ளம் காரணமாக 19 உப்பு மூட்டைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன. மீதமுள்ள உப்பு மூட்டைகள் மற்றொரு குடோனில் மறுசீரமைக்கப்பட்டன, அதில் 94 உப்பு மூட்டைகள் மேலும் சேர்க்கப்பட்டன. கனமழையால் மேலும் 37 பைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.உப்பு மூட்டைகளின் மீதமுள்ள இறுதி எண்ணிக்கைக்கும் ஆரம்ப எண்ணிக்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?


a. 20 b. 57 c. 38 d. 37


**5.** ஒரு குடோனில் ஆரம்பத்தில் 77 சர்க்கரை மூட்டைகள் வைக்கப்பட்டிருந்தது. திடீர் வெள்ளம் காரணமாக 35 சர்க்கரை மூட்டைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன. மீதமுள்ள சர்க்கரை மூட்டைகள் மற்றொரு குடோனில் மறுசீரமைக்கப்பட்டன, அதில் 84 சர்க்கரை மூட்டைகள் மேலும் சேர்க்கப்பட்டன. கனமழையால் மேலும் 27 மூட்டைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன எனில், மீதி எவ்வளவு சர்க்கரை மூட்டைகள் இருக்கும்?


a. 223 b. 57 c. 69 d. 99


# அறிவியல்

1. ஒரு சிறுவன் தன் சைக்கிளில் சீரான வேகத்தில் வினாடிக்கு 10 மீட்டர் தொலைவை கடந்து செல்கிறான். இதனைக் காட்டும் சரியான வரைபடம் எது?


a. 


b. 


c. 


d. 


2. ஒரு மகிழுந்து சென்னையிலிருந்து காஞ்சிபுரம் பயணித்த வேகம் மற்றும் காலத்தின் மதிப்புகள் அட்டவணைப்படுத்தப்பட்டு கீழ் உள்ள வரைபடமானது வரையப்பட்டுள்ளது. இவ்வரைபடத்திலிருந்து அந்த மகிழுந்து பற்றிய சரியான கூற்று எது?



a. மகிழுந்து சீரான முடுக்கத்தில் சென்றுள்ளது.

b. மகிழுந்து சீரான எதிர் முடுக்கத்தில் சென்றுள்ளது.

c. மகிழுந்தின் முடுக்கம் அதிகரித்துகொண்டே சென்றுள்ளது

d. மகிழுந்தின் முடுக்கம் குறைந்து கொண்டே சென்றுள்ளது.

3. அருண் தன் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து பள்ளிக்கு செல்கிறான். அவன் பயணித்த விவரங்கள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

| காலம் (நிமிடம்) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| வேகம்(கி.மீ / நி) | 0 | 16 | 32 | 48 | 64 | 80 |

**பின்வரும் கூற்றுகளில் இந்த அட்டவணைக்கு உகந்த சரியான கூற்று எது?**

a. இருசக்கர வாகனத்தின் வேகம் காலத்தைப் பொருத்து சீரற்ற வேகத்தில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

b. இருசக்கர வாகனத்தின் வேகமானது காலத்தினைப் பொருத்து குறைந்துகொண்டே செல்கிறது.

c. இருசக்கர வாகனம் மாறாத வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

d. இருசக்கர வாகனத்தின் வேகம் காலத்தைப் பொருத்து சீரான வேகத்தில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

**4. சரியாகப் பொருத்தி, விடையினைத் தேர்வு செய்க.**

1. தூண் வேர்கள் – அ. கரும்பு
2. முட்டு வேர்கள் – ஆ. மக்காச் சோளம்
3. பற்று வேர்கள் – இ. மிளகுக் கொடி
4. சுவாச வேர்கள் – ஈ. அவிசினியா

a. 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ. b. 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ.
c. 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ. d. 1 – ஆ, 2 – இ, 3 – ஈ, 4 – அ.

**5. நிமட்டோஃபோர்கள் என்பது ___________.**

a. கிடைமட்டக் கிளைகளிலிருந்து தோன்றி, செங்குத்தாகப்பூமியை நோக்கி வளர்ந்து தாவரத்திற்கு ஆதாரமளிக்கும் வேர்கள்.
b. தண்டின் அடிப்பகுதியில் கணுக்களிலிருந்து கொத்தாக தோன்றி தரையில் ஊன்றுவதன் மூலம் தாவரத்திற்கு உறுதியளிக்கும் வேர்கள்
c. தரைக்கு மேலே குச்சி போன்று நீண்டு வளர்ந்து, எண்ணற்ற துளைகளைக் கொண்ட வாயு பரிமாற்றத்திற்கு உதவும் வேர்கள்.
d. பிறமரங்களிலும் தாவரங்களிலும் படர்ந்து ஓம்புயிரித்தாவரத் திசுக்களைத்துளைத்து, அதிலுள்ளஊட்டச்சத்தை உறிஞ்சும் வேர்கள்.

---

## சமூக அறிவியல்

**1. அன்னம் வருங்காலத்தில் தன் மகள் திருமணத்திற்கென்று சிறுகச் சிறுக தங்கத்தை வாங்கி வைக்கிறாள். இத்தொடர் எந்த வகைப் பயன்பாட்டில் அடங்கும்?**

a. இடப்பயன்பாடு b. வடிவப் பயன்பாடு
c. சேவை பயன்பாடு d. காலப் பயன்பாடு\

**2. "நாடுகளின் செல்வமும் அவற்றை உருவாக்கும் காரணிகளும் ஓர் ஆய்வு" என்ற நூலினை அறிமுகப்படுத்தியவர் யார்?**

a. ஆல்பிரட் மார்ஷல் b. அமர்த்தியா சென்
c. கார்ல் மார்க்ஸ் d. ஆடம்ஸ்மித்

**3. கீழ்க்கண்ட ராஜபுத்திர அரசகுலங்களில், அக்னி குல மரபைச் சேராதவர் யார்?**

a. பிரதிகாரர்கள் b. சௌகன்கள்
c. கச்வாகா d. சோலங்கிகள்

**4. பௌத்தர்களுக்கு கிராமங்களைக் கொடையாக வழங்கியவர்_______ .**

a. தர்மபாலர் b. தேவபாலர்
c. மகிபாலர் d. கோபாலர்

**5. தவறான இணையைத் தேர்வு செய்க**

a. தென் அமெரிக்கா – ஏஞ்சல் நீர்வீழ்ச்சி
b. வட அமெரிக்கா – நயாகரா நீர்வீழ்ச்சி
c. ஆப்பிரிக்கா – ஜோக் நீர்வீழ்ச்சி
d. சுவிட்ஸர்லாந்து – ரைன் நீர்வீழ்ச்சி

## கற்றல் விளைவு / திறன்வழி மதிப்பீட்டுத் தேர்வு (விடைக் குறிப்பு)

**வகுப்பு : 7** **மொழி : தமிழ் வழி**

**பாடம் : தமிழ்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | ஈ. | உழைப்பின்றி ஊதியம் இல்லை. |
| 2. | இ. | தனக்கு விருப்பமான வேலையைச் செய்ததால். |
| 3. | அ. | கூற்று சரி, காரணம் தவறு |
| 4. | ஈ. | ஏழைமனிதர் |
| 5. | ஈ. | குமரன் வகுப்பறையில் உள்ள சகமாணவர்களின் தேர்ச்சியைக்கண்டு மகிழ்ச்சி கொள்வான். |


**பாடம் : ஆங்கிலம்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | a. | To help the tiger since he was in pain. |
| 2. | c. | Bone |
| 3. | c. | furious |
| 4. | c. | No, he denied to share his food |
| 5. | b. | Ungrateful |

**பாடம் : கணிதம்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | c | 22°C |
| 2. | c | 31°C |
| 3. | b / c | $X + Y > Z$ / $X + Z < Y$ |
| 4. | c | 38 |
| 5. | d | 99 |

**பாடம் : அறிவியல்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | b. |  |
| 2. | c. | மகிழுந்தின் முடுக்கம் அதிகரித்துகொண்டே சென்றுள்ளது. |
| 3. | d. | இருசக்கர வாகனத்தின் வேகம் காலத்தைப் பொருத்து சீரான வேகத்தில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. |
| 4. | a. | a. 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ. |
| 5. | c. | தரைக்கு மேலே குச்சி போன்று நீண்டு வளர்ந்து, எண்ணற்ற துளைகளைக் கொண்ட வாயு பரிமாற்றத்திற்கு உதவும் வேர்கள். |

**பாடம் : சமூக அறிவியல்**

| வினா எண் | தெரிவு | விடை |
|---|---|---|
| 1. | d. | காலப் பயன்பாடு |
| 2. | d. | ஆடம்ஸ்மித் |
| 3. | c. | கச்வாகா |
| 4. | b. | தேவபாலர் |
| 5. | c. | ஆப்பிரிக்கா – ஜோக் நீர்வீழ்ச்சி |